# QB365 Question Bank School

**Half Yearly Model Question - 2023**

10th Standard

Total Marks : 100

**PART - A** 14 x 1 = 14

**Answer The All Questions :**

1) காபி அதிகம் உற்பத்தி செய்யும் மாநிலம்

(a) மேற்கு வங்கம் **(b) கர்நாடகா** (c) ஒடிசா (d) பஞ்சாப்

2) சென்னை மகாஜன சபையின் முதல் தலைவர் யார்?

(a) T.M. நாயர் **(b) P. ரங்கையா** (c) G. சுப்பிரமணியம் (d) G.A. நடேசன்

3) பின்லாந்திற்கும், சுவீடனுக்குமிடையே பிரச்சனை ஏற்படக் காரணமான தீவுகள்

(a) பஹாமா தீவுகள் (b) கார்சிகா தீவுகள் **(c) ஆலேண்டு தீவுகள்**
(d) லட்சத் தீவுகள்

4) "ஜெர்மனியரே சுத்தமான ஆரிய இனத்தவர்" எனும் இன உணர்வு கொண்டிருந்தவர்

(a) முசோலினி (b) நெப்போலியன் **(c) ஹிட்லர்** (d) லெனின்

5) உலகில் மிக அதிக அளவு மழை பெறும் பகுதியான மௌசின்ராம் _____ ல் அமைந்துள்ளது.

**(a) மேகாலயா** (b) அஸ்ஸாம் (c) மணிப்பூர் (d) அருணாச்சல பிரதேசம்

6) நெல் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு

**(a) சீனா** (b) இந்தியா (c) பிரேசில் (d) ஜப்பான்

7) இந்தியா உலக அளவில் காற்றாலைகளைத் திறன் கொண்ட நாடுகளில் _______ இடத்தில் உள்ளது.

(a) இரண்டாவது **(b) நான்காவது** (c) ஐந்தாவது (d) ஏழாவது

8) _______ ஆம் நாள் இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தது.

(a) ஜனவரி 26, 1947 (b) ஆகஸ்டு 15,1947 (c) ஜனவரி 30,1950 **(d) ஜனவரி 26,1950**

9) தமிழ் நாட்டில் சட்டமேலவை நீக்கப்பட்ட ஆண்டு

**(a) 1986** (b) 1985 (c) 1984 (d) 1983

10) ________ என்பது அந்நாட்டு மக்களால் ஒரு வருடத்தில் உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடுகளின் மதிப்பைக் குறிக்கும்.

**(a) மொத்த நாட்டு உற்பத்தி (GNP)** (b) மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)
(c) நிகர நாட்டு உற்பத்தி (NNP) (d) தலா வருமானம் (PCI)

11) சிவப்பு வண்ணக்கல் அலங்காரப் பொருட்களை வர்த்தகத்திற்கு கொண்டுவந்தவர்கள்

**(a) கலிங்க வர்த்தகர்கள்** (b) பல்லவ வர்த்தகர்கள் (c) சோழ வர்த்தகர்கள்
(d) பாண்டிய வர்த்தகர்கள்

12) தென்னிந்தியக் கூட்டமைப்பை சிவகங்கையில் ________ ஏற்படுத்தினர்.

**(a) மருது பாண்டியர்** (b) வீரபாண்டிய கட்டபொம்மன் (c) கோபால நாயக்கர்
(d) பூலித்தேவன்

13) நிலக்கரி உற்பத்தில் ________ நாட்டின் மொத்த உற்பத்தில் தமிழ்நாட்டின் பங்களிப்பாகும்.

**(a) 55.3** (b) 56.3 (c) 54.3 (d) 54.2

14) "தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல்" என்பது

(a) புதிய அரசியல் கொள்கை **(b) புதிய பொருளாதாரக் கொள்கை**
(c) புதிய சமயக் கொள்கை (d) புதிய இராணுவக் கொள்கை

**PART - B** 10 x 2 = 20

**Answer The All Questions :**

15) திருநெல்வேலி எழுச்சி பற்றி ஒரு குறிப்பு வரைக.

**Answer :** 1. திருநெல்வேலியிலும், தூத்துக்குடியிலும் நூற்பாலைத் தொழிலாளர்களை அணி திரட்டுவதில் வ.உ.சி, சுப்பிரமணிய சிவாவின் தோளோடுதோள் நின்றார்.
2. சிவா 1906இல் ஐரோப்பியருக்குச் சொந்தமான கோரல் நூற்பாலையில் நடைபெற்ற வேலை நிறுத்தத்திற்குத் தலைமையேற்றார்.
3. இந்நிகழ்வு நடைபெற்ற அதே சமயத்தில் பிபின் சந்திரபால் விடுதலை செய்யப்பட்டார். பிபின் விடுதலையைக் கொண்டாடுவதற்காகப் பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்த வ.உ.சியும் சிவாவும் கைது செய்யப்பட்டனர்.
4. தலைவர்கள் இருவரும் அரச துரோகக் குற்றம் சாட்டப்பட்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டனர்.
5. வ.உ.சிக்கு கொடுமையான வகையில் இரண்டு ஆயுள் தண்டனைகள் வழங்கப்பட்டன.
6. மக்கள் செல்வாக்குப் பெற்ற இவ்விரு தலைவர்களும் கைது செய்யப்பட்ட செய்தி பரவியதில் திருநெல்வேலி கலவரம் வெடித்தது.
7. காவல் நிலைய, நீதிமன்ற, நகராட்சி அலுவலகக் கட்டடங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. காவலர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் நான்கு நபர்கள் கொல்லப்பட்டனர்.
8. தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்டனர்.

16) இலத்தின் அமெரிக்க நாடுகள் குறித்த அமெரிக்கக் குடியரசுத்தலைவர் தியோடர் ரூஸ்வெல்டின் கருத்தை எழுதவும்

**Answer :** இலத்தீன் அமெரிக்க நாடுகள் குறித்த அமெரிக்கக் குடியரசுத் தலைவர் தியோடர் ரூஸ்வெல்டின் எண்ணப்போக்குகளை அவருடைய வார்த்தைகளிலேயே சுருங்கக் கூறலாம் மிருதுவாகப் பேசுங்கள், ஒரு தடியை வைத்து கொள்ளுங்கள்

17) பிரிட்டன் போர் - குறிப்பு தருக

**Answer :** (i) பிரிட்டன் போர் - 1940 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் ஜெர்மனி இங்கிலாந்தின் மீதும் படையெடுக்கும் எனும் அச்சம் ஏற்பட்டது
(ii) நீண்ட நெடிய ஆகாய விமானக் குண்டுத் தாக்குதல்களில் மூலம் தனது திட்டங்களை ஒதுக் கொள்ளுமாறு இங்கிலாந்தை வற்புறுத்தி ஹிட்லர் விரும்பினார்
(iii) ஜெர்மனியின் விமானப்படைகள் குறிப்பிட்ட இலக்குகளை, மிக்க குறிப்பாகத் துறைமுகங்கள், விமானத் தளங்கள் தொழிற்சாலைகள் ஆகியவற்றைத் தாக்கத் தொடங்கின. 1940 செப்டம்பர் திங்களில் லண்டன் நகரம் இரக்கமற்ற முறையில் குண்டு வீச்சு இலக்கானது

18) வேலுநாச்சியாரின் திறமைகளைக் குறிப்பிடுக.

**Answer :** 1. வேலுநாச்சியார் வளரி, சிலம்பம் போன்ற தற்காப்புகலைகளிலும், போர்க் கருவிகளைக் கையாளுவதற்கும் பயிற்சி பெற்றிருந்தார்.
2. ஆங்கிலம், பிரெஞ்சு, உருது போன்ற மொழிகளில் அவர் வல்லமை பெற்றிருந்தார்.
3. அவர் குதிரையேற்றத்திலும், வில்வித்தையிலும் திறமையானவராக விளங்கினார்.

19) இந்திய தேசிய காங்கிரஸ் எந்த ஆண்டு உருவானது?

**Answer :** ஒரு அகில இந்திய அமைப்பை உருவாக்க முனைந்ததன் விளைவாக 1885ஆம் ஆண்டில் இந்திய தேசிய காங்கிரஸ் உருவானது.

20) பரிதிமாற் கலைஞர் பற்றி குறிப்பு வரைக.

**Answer :** 1. வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரி தனக்குத்தானே பரிதிமாற் கலைஞர் என தூய தமிழ் பெயரைச் சூட்டிக் கொண்டார்.
2. அவர் தமிழின் மீது சமஸ்கிருதம் கொண்டிருந்த செல்வாக்கை அடையாளம் கண்ட நொடக்ககாலத் தமிழ் அறிஞர்களில் ஒருவராவார்.
3. தமிழ் மொழி ஒரு செம்மொழி என்றும், எனவே சென்னைப் பல்கைலக்கழகம் தமிழை ஒருவட்டார மொழியென அழைக்கக்கூடாதென முதன்முதலாக வாதாடியவர் இவராவார்.
4. மேற்கத்திய இலக்கிய மாதிரிகள் மீது இவர் கொண்டிருந்த தாக்கத்தின் விளைவாக 14 வரிச் செய்யுள் வடிவத்தை தமிழுக்கு அறிமுகம் செய்தார்.
5. மேலும் இவர், அதிக எண்ணிக்கையிலான நாவல்களையும், நாடகங்களையும் அறிவியல் கட்டுரைகளையும் எழுதினார்.

21) நீர்வளத்தை பாதுகாக்கும் சில வழிமுறைகளை எழுதுக.

**Answer :** நீர் மாசுபடுதலைத் தடுத்தல், நீர் மறுசுழற்சி, சிக்கனமான நிலத்தடி நீர் பயன்பாடு, மக்கள் தொகை கட்டுப்பாடு, மரபுவழி நீர்வளங்களை புதுப்பித்தல், நவீன நீர்ப்பாசன முறைகளைப் பயன்படுத்துதல், காடுகளின் பரப்பளவை அதிகரித்தல், பயிரிடும் முறைகளை மாற்றுதல், வெள்ளப்பெருக்கு மேலாண்மை, புவி வெப்ப நீர் பயன்பாடு ஆகியன நீர்வளத்தை பாதுகாக்கும் வழிமுறைகள் ஆகும்.

22) இந்திய வெளியுறவு கொள்கை எவ்வகையில் மாற்றம் கொண்டது?

**Answer :** 1) சீனாவுடனான நட்புறவு - கிழக்கு நோக்கு கொள்கை (1992)
2) பொக்ரான் (ராஜஸ்தானில்) நடைபெற்ற இரண்டாவது அணுசோதனை (1998)
3) இஸ்ரேலிடமிருந்து பாதுகாப்பு தளவாடங்களை கொள்முதல் செய்தலுக்கான உறவு.
4) அரபு நாடுகள் மற்றும் ஈரானுடன் எரிசக்தி ஆற்றல் வள தூதரக உறவு.
5) அமெரிக்காவின் அணு ஏவுகணைப் பாதுகாப்பு திட்டத்தை ஏற்றுக் கொள்ளுதல்
6) சர்வதேச அணுசக்தி நிறுவனத்தில் ஈரானுக்கு எதிராக இந்தியாவின் வாக்களிப்பு.

23) இந்தியா அண்டை நாடுகளுடன் கொண்டுள்ள உறவுகளைக் குறிப்பிடுக.

**Answer :** இந்தியா தனது அண்டைநாடுகளுடன் வரலாற்று ரீதியாகவும், சமய, பொருளாதார, இன மற்றும் மொழியின் அடிப்படையிலும் நல்லுறவைப் பேணுகிறது.

24) கட்டணம் என்றால் என்ன?

**Answer :** 1) கட்டணம் என்பது பணிகளை பயன்படுத்துவதற்காக செலுத்துவதாகும்.
2) ஒரு குறிப்பிட்ட நன்மைகளுக்கான தனிச் சலுகைகளைப் பெற்றிருந்தாலும், பொதுநல ஒழுங்கு முறையின் சிறப்பான முதன்மை நோக்கமாகும். எ.கா: கட்டணங்கள் (Fees), அபராதம் போன்றவையாகும்.

## PART - C

10 x 5 = 50

**Answer The All Questions :**

25) 19ஆம் நூற்றாண்டில் சீர்திருத்த இயக்கங்கள் நடைபெறுவதற்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகளை விவாதிக்கவும்.

**Answer :** 1. 19 ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் சமூகம் மற்றும் சமயத்தில் பல சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
2. மேலை நாட்டுக் கல்வியினால் மக்கள் மேற்கத்திய கருத்துக்களான பகுத்தறிதல், சமத்துவம், சுதந்திரம், தேசியம் மற்றும் மனிதாபிமானம் போன்ற கருத்துகளால் மிகவும் கவரப்பட்டனர்.
3. இவர்கள் மீது கிறிஸ்துவ மதத்தின் தாக்கமும் ஏற்பட்டது.
4. இராஜா ராம்மோகன் ராய், பங்கிம் சந்திர சட்டர்ஜி, K.C.சென் போன்ற சீர்திருத்தவாதிகள் மக்களுக்கு உற்சாகமூட்டினர்.
5. மேற்கத்திய தாராள சிந்தனைகள் பரவியதும் சமூக பண்பாட்டு விழிப்புணர்வு தோன்றியது.
6. இந்திய பண்பாட்டில் இருந்த குறைகளை களைந்து, இந்தியாவின் பழம்பெரும் கலாச்சார புகழை மீண்டும் கொண்டுவர விரும்பினர்.
7. அவர்கள் பல்வேறு சமூக மற்றும் சமய சீர்திருத்த இயக்கங்களைத் தோற்றுவித்தனர்.
8. இதன் மூலம் இந்திய சமுதாயத்திலிருந்த குறைகளை களைய முற்பட்டனர்.
9. இத்தகைய சூழலில் தோன்றிய சமூக, சமய சீர்திருத்த இயக்கங்கள் இந்தியாவின் மறுமலர்ச்சி இயக்கங்கள் என அழைக்கப்பட்டன.

26) அரபு - இஸ்ரேல் போர் பற்றி ஒரு பத்தியளவில் எழுதுக

**Answer :** (i) வெர்செல்ஸ் உடன்படிக்கையின் (1919) மூலம் துருக்கிய அரபுப் பேரரசை உருவாக்க நிர்பந்திக்கப்பட்டது.
(ii) பிரான்ஸ் நாடு சி ரியாவையும் லெப்னாவையும் ஒருங்கிணைக்கவும் பிரிட்டன் நாடு ஈராக், பாலஸ்தீன்,ஜோர்டான் ஆகிய நாடுகளை ஒருங்கிணைக்கவும் ஏற்பாடானது
(iii) முதலாம் உலகப்போருக்குப் பின் சுதந்திரத்தை எதிர்பார்த்த அரேபியர்கள் இவ்வேறுபாட்டால் அதிர்ச்சியடைந்தார்
(iv) சீயோனிய இயக்க தலைவர்களுக்கு பிரிட்டன் நாடு பாலஸ்த்தீனத்தின் பகுதிகளை யூதக் குடியிருப்புகளுக்கு வழங்க உறுதியளித்தது
(v) யூதர்கள் அரேபியரின் எந்த ஒரு கிளர்ச்சியையும் பிரிட்டனுடன் சேர்ந்து ஒடுக்க உறுதியளித்தனர்
(vi) வசதியான அரேபியரிடம் விலைபேசி நிலங்களைப் பெற்றுக் கொண்ட யூதர்கள் அங்கே பல தலை முறைகளாக வேளாண்மை செய்து வந்தவர்களை விரட்டியதால் அரேபியர்களின் வெறுப்புணர்ச்சியும் எதிர்ப்பும் மிகுந்தது
(vii) 1945 அக்டோபர் திங்கள் கடைசியில் யூதத் திரை மறைவு அமைப்புகளான இர்கூன் ஸ்வாய் லூமி (சீயோனியத் துணை இராணுவ அமைப்பு) ஸ்டென் காங்கும் (சீயோனிய பயங்கரவாத அமைப்பு) தொடர்ச்சியாக பயங்கரவாதத் தாக்குதல்களை பெருமளவில் தொடுத்தன
(viii) இருப்புப் பாதைகள், பாலங்கள், விமானத் தளங்கள், அரசு அலுவலங்கள் போன்றவை வெடி வைத்துத் தாக்கப்பட்டன
(ix) பிரிட்டிஷ் அரசு பிரச்சனையை ஐக்கிய சபைக்கு எடுத்துச் சென்று தீர்வு கோரியது. ஐ.நா சபையும் அதற்கு உடன்பட்டு பிரிவினை சம்மதித்தது.
(x) பிரிட்டன் தனது துருப்புகளை விலக்கிக் கொள்ள முடிவு செய்த் பொது அங்கு மீண்டும் சண்டை மூண்டது
(xi) இஸ்ரேலியர்கள் ஜெருசலேமுக்குச் செல்லும் முக்கிய சாலையை வெற்றிகரமாகக் கைப்பற்றி அதை மீட்க அரேபியர்கள் மேற்கொண்டப் பல முயற்சிகளையும் வெற்றிகரமாக முறியடித்தார்

27) அயோத்திதாசரின் சமுதாயத் தொண்டினை விவரி.

**Answer :** 1. பண்டிதர் அயோத்தி தாசர் ஒரு தீவிரத் தமிழ் அறிஞரும் சித்த மருத்துவரும் பத்திரிக்கையாளரும் சமூக அரசியல் செயல்பாட்டாளரும் ஆவார்.
2. அவர் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், பாலி ஆகிய மொழிகளில் புலமை பெற்று சரளமாகப் பேசக் கூடியவர்.
3. சமூக நீதிக்காக இயக்கம் நடத்திய அவர், சாதியத்தின் கொடிய பிடியிலிருந்து ஒடுக்கப்பட்டோர் விடுதலைபெறப் பாடுபட்டார்.
4. சாதிகளற்ற அடையாளத்தை நிறுவ முயன்ற அவர் சாதிய மேலாதிக்கத்திற்கும் தீண்டாமைக்கும் எதிராக கண்டனக்குரல் எழுப்பினார்.
5. கல்வியை வலிமை பெறுவதற்கான கருவியாகக் கருதிய அவர் தமிழகத்தில் ஒடுக்கப்பட்டோருக்கென பல பள்ளிகள் உருவாக்கப்படுவதற்கு உந்து சக்தியாகத் திகழ்ந்தார்.
6. ஒடுக்கப்பட்டோரின் கோயில் நுழைவுக்கு ஆதரவாகக் குரல் எழுப்புவதற்காக அயோத்திதாசர் 'அத்வைதானந்தா சபா' எனும் அமைப்பை நிறுவினார்.
7. 1882 இல் 'திராவிடர் கழகம்' எனும் அமைப்பையும் 1885 இல் 'திராவிட பாண்டியன்' எனும் இதழையும் 1907 இல் 'ஒரு பைசா தமிழன்' எனும் வாராந்திர பத்திரிக்கையையும் தொடங்கினார்.

28) இந்திய விவசாயிகள் எதிர் கொள்ளும் முக்கிய சவால்கள் விவரிக்க.

**Answer :** இந்திய வேளாண்மை மற்றும் இந்திய விவசாயிகள் பல்வேறு சவால்களை எதிர்கொள்கின்றனர். அவற்றில் சில இயற்கைக் காரணிகளாகவும் வேறு சில செயற்கைக் காரணிகளாகவும் உள்ளன அவை

**சிறிய மற்றும் குறுநில உடமை:**

இந்தியாவில் மக்கள் அடர்த்தி மிகுந்த மற்றும் தீவிர பயிர் சாகுபடி செய்யும் மாநிலங்களில் சிறிய மற்றும் துண்டாக்கப்பட்ட நில உரிமையாளர்கள் அதிகம் உள்ளனர். இந்தியாவில் 67 சதவீதம் நில உடமையாளர்கள் [1 ஹெக்டேருக்கும் குறைவு] குறு விவசாயிகளாக உள்ளனர்.

**அதிக செலவின் உள்ளீடுகள்:**

1. அதிக விளைச்சலுக்கு தொடர் வேளாண் உற்பத்திக்கும் விதைகள் அடிப்படையான ஒரு உள்ளீடாகும்.
2. அதிக விலையின் காரணமாக நல்ல தரமான விதைகள் சிறு - குறு விவசாயிகளுக்கு எட்டாக் கனியாக உள்ளது.

**வளமற்ற மண்:**

இந்திய மண் பல்லாயிரம் ஆண்டுகளாக தொடர்ந்து வளம் கூட்டல் மற்றும் புதுப்பித்தல் செயல்பாடின்றி வேளாண்மைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதால் மண்ணின் வளம் குன்றி அதன் உற்பத்தித் திறன் பாதிக்கப்பட்டுள்ளது.

**நீர்ப்பாசன பற்றாக்குறை:**

இந்தியாவில் மூன்றில் ஒரு பங்கு வேளாண் நிலப்பகுதியே பாசன வசதியைப் பெற்றிருக்கின்றது.

**இயந்திரமயமாக்க பற்றாக்குறை:**

நாட்டின் பல பகுதிகளில் வேளாண்மை பெரிய அளவில் இயந்திரமயமாக்கப் பட்டிருப்பினும் பெரும்பாலான பகுதிகளில் மனிதர்களைக் கொண்டு எளிய மற்றும் பழமையான கருவிகள் மூலமே வேளாண்மை செய்யப்படுகிறது.

**மண் அரிப்பு:**

காற்று மற்றும் நீரின் மூலமான மண் அரிப்பில் பெரும் நிலப்பரப்பு பாதிக்கப்பட்டுள்ளது.

**வேளாண் சந்தை:**

தரமான உள்கட்டமைப்பு வசதிகள் இன்மையால் விவசாயிகள் உள்ளூர் வியாபாரிகளிடமும், தாகர்களிடமும் விவசாயப் பொருட்களைக் குறைந்த விலைக்கு விற்பனை செய்கிறார்கள். மேலும் விவசாயப் பொருட்களின் விலையில் அதிகமாக ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன.

**சேமிப்பு கிடங்கு வசதியில்லாமை:**

கிராமப்புற பகுதிகள் விவசாய சேமிப்பு கிடங்கு வசதியற்றோ அல்லது முழுமை பெறா நிலையிலோ காணப்படுகிறது. இத்தகைய சூழலில் விவசாயிகள் அறுவடை முடிந்தவுடன் வேளாண் உற்பத்திப் பொருட்களை சந்தையில் விற்கும் கட்டாய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

**போக்குவரத்து வசதியின்மை:**

இந்திய வேளாண்மையின் முக்கிய சவால்களில் ஒன்று மலிவான மற்றும் போதுமான போக்குவரத்து வசதியின்மையாகும்.
தற்சூழலில் இலட்சக்கணக்கான கிராமங்களில் பிரதான இணைப்புச் சாலைகள் இல்லாமலோ அல்லது சந்தை மையங்களுடன் இணைக்கப்படாமலோ உள்ளது.

**மூலதனப் பற்றாக்குறை:**

வேளாண்மை அதிக மூலதனம் தேவைப்படும் தொழில்களில் ஒன்றாகும். மேம்படுத்தப்பட்ட பண்ணை இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்க போதுமான மூலதனம் விவசாயிகளிடம் இல்லை.

29) இந்திய தொழிலகங்கள் எதிர்கொள்ளும் முக்கிய சவால்கள் - விவரிக்க.

**Answer : இந்திய தொழிலகங்கள் பல சவால்களை எதிர்கொண்டுள்ளன. அவற்றில் சில முக்கிய பிரச்சனைகள்.**

1. மின் பற்றாக்குறை மற்றும் சீரற்ற மின் வினியோகம்.
2. தொழிலகங்கள் நிறுவுவதற்கேற்ற பரந்த நிலப்பரப்பு இல்லாமை.
3. கடன் பெறுவதிலுள்ள நடைமுறை சிக்கல்கள்
4. கடனுக்கான அதிக வட்டி விகிதம்
5. மலிவான ஊதியத்திற்கு வேலையாட்கள் கிடைக்காமை.
6. ஊழியர்களுக்கான தொழில்நுட்ப மற்றும் தொழில்முறை பயிற்சிகள் இல்லாமை.
7. தொழிற்பேட்டைகளுக்கருகில் வசிப்பதற்கு ஏற்ற சூழல் இல்லாமை.

30) அதிக மக்கள் தொகையால் ஏற்படும் பிரச்சனைகள் யாவை?

**Answer :** 1. இந்திய நாட்டில் அதிகரித்துவரும் மக்கள் தொகையானது சமூகம், பொருளாதாரம், கலாச்சாரம், அரசியல் மற்றும் கற்றுச்சூழலில் பெரும் சவால்களை ஏற்படுத்துகின்றது.
2. மக்கள் தொகை பிரச்சனையானது இடம் மற்றும் காலத்திற்கு ஏற்ப மாறுபடுகிறது.
3. மக்கள் தொகை அதிகரிப்பால் ஏற்படும் பிரச்சனைகள்:
4. மக்கள் நெருக்கடி
5. இட நெருக்கடி
6. வேலைவாய்ப்பின்மை
7. திறனுக்கேற்ற வேலையின்மை
8. குறைந்த வாழ்க்கைத்தரம்
9. ஊட்டச்சத்து இன்மை
10. இயற்கை மற்றும் வேளாண் நிலங்களைத் தவறாக நிர்வகித்தல்
11. ஆரோக்கியமற்ற சூழல் போன்ற பிரச்சனைகள் ஏற்படுகின்றன.

31) அடிப்படைக் கடமைகள் பற்றி விவரிக்கவும்.

**Answer :** **அடிப்படைக் கடமைகள்:**
1. ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் அரசியலமைப்பு அறன் கொள்கைகள், நிறுவனங்கள், தேசியகீதம், தேசியக்கொடி, தேசியச் சின்னங்கள் ஆகியவற்றை மதித்தல்,
2. சுதந்திர போராட்டத்திற்குத் தூண்டுகோலாக அமைந்த உயரிய நோக்கங்களைப் போற்றி வளர்த்தல்.
3. இந்தியாவின் இறையாண்மை, ஒற்றுமை, ஒருமைப்பாடு இவற்றைப் பேணிப் பாதுகாத்தல்.
4. தேசப் பாதுகாப்பிற்காகத் தேவைப்படும் பொழுது தேசப் பணியாற்ற தயாராயிருத்தல்.
5. சமய, மொழி மற்றும் பிராந்திய அல்லது பகுதி சார்ந்த வேறுபாடுகளை மறந்து, பெண்களைத் தரக்குறைவாக நடத்தும் பழக்கத்தை நிராகரித்து, பெண்களின் கண்ணியத்தைக் காக்கும் எண்ணங்களை மேம்படுத்தி, இந்திய மக்கள் அனைவரிடையேயும் சகோதரத்துவத்தை வளர்த்தல்.
6. நமது உயர்ந்த பாரம்பரிய கலப்பு கலாச்சாரத்தை மதித்து பாதுகாத்தல்.
7. காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் மற்றும் உயிரினங்கள் அடங்கிய இயற்கைச் சற்றுச்சூழலைப் பாதுகாத்து, மேமபடுததி அவை வாழும் சூழலை ஏற்படுத்துதல்.
8. அறிவியல் கோட்பாடு, மனித நேயம், ஆராய்ச்சி மனப்பான்மை மற்றும் சீர்திருத்தம் ஆகியவற்றை வளர்த்தல், வன்முறையைக் கைவிட்டு பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல்.
9. தனிப்பட்ட மற்றும் கூட்டுச் செயல்பாடுகள் என அனைத்துச் செயல்பாடுகளிலும் சிறந்தவற்றை நோக்கி செயல்பட்டு, தேசத்தின் நிலையான உயர்ந்த முயற்சி மற்றும் சாதனைக்காக உழைத்தல்,
10. 6 முதல் 14 வரையுள்ள குழந்தைகள் அனைவருக்கும் கல்வி பெறும் வாய்ப்பினை வழங்குதல்.

32) ஆளுநரின் சட்டமன்ற அதிகாரங்களை விவரி.

**Answer : சட்டமன்ற அதிகாரங்கள்:**

1. ஆளுநர் சட்டமன்ற கூட்டத்தைக் கூட்டவும் ஒத்திவைக்கவும் சட்டமன்றத்தைக் கலைக்கவும் உரிமைப் பெற்றுள்ளார்.
2. தேர்தல் முடிந்து சட்டசபை அமைந்த முதல் கூட்டத் தொடரிலும் மற்றும் ஒவ்வொரு ஆண்டு முதல் கூட்டத்திலும் உரையாற்றுகின்றார்.
3. நிலுவையிலுள்ள மசோதா குறித்து சட்டமன்ற அவைகளுக்கு ஆளுநர் செய்தி அனுப்பலாம்.
4. சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர் பணியிடம் காலியாக இருக்கும்பொழுது சட்டமன்றத்தை தலைமை ஏற்று நடத்த எந்த சட்டமன்ற உறுப்பினாரை வேண்டுமானாலும் ஆளுநர் நியமனம் செய்யலாம்.
ஆங்கிலோ இந்தியன் வகுப்பினரிலிருந்து ஓர் உறுப்பினரை மாநில சட்டமன்றத்திற்கு நியமனம் செய்யலாம்.
5. கலை, இலக்கியம், அறிவியல், கூட்டுறவு இயக்கம் மற்றும் சமூக சேவை போன்றவற்றில் சிறந்து விளங்கும் நபர்களைத் தேர்ந்தெடுத்து மாநில சட்டமேலவையின் 6 இல் 1 பங்கு இடங்களுக்கு அவர்களை நியமனம் செய்கிறார்.
6. மாநில சட்டமன்றத்தால்நிறைவேற்றப்படும் ஒவ்வொரு மசோதாவும் ஆளுநர் கையொப்பமிட்ட பின்னர் மட்டுமே சட்டமாகும். ஆனால், சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட ஒரு மசோதா ஆளுநர் ஒப்புதலுக்காக அனுப்பப்படும் பொழுது ஆளுநர் கையொப்பமிடலாம் அல்லது நிறுத்தி வைக்கலாம் அல்லது மீண்டும் மறு பரிசீலனைக்காக சட்டமன்றத்திற்கே திருப்பி அனுப்பலாம்.
7. அரசியலமைப்பு சட்டப்பிரிவு 213இன் கீழ் ஆளுநர் மாநில சட்டமன்றம் நடைபெறாத பொழுது அவசர சட்டத்தைப் பிறப்பிக்கலாம். ஆனால் அந்த அவசரச்சட்டம், 6 மாதத்திற்குள் மாநில சட்டமன்றத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டும். அவசரச்சட்டத்தை எந்நேரத்திலும் ஆளுநர் திரும்பப்பெறலாம்.
8. மாநிலத்தின் ஆண்டு நிதிநிலை அறிக்கை, அரசுப்பணியாளர் தேர்வாணையக் குழுவின் அறிக்கை, அரசின் தணிக்கைக்குழு அறிக்கைகளை சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கின்றார்.

33) மொத்த உள்நாட்டு உற்பத்தியின் உள்ள குறைபாடுகளை விளக்குக.

**Answer : GDP யில் பல முக்கிய பண்டங்கள் மற்றும் பணிகள் சேர்க்கப்படவில்லை :**

(i) சந்தையில் விற்கப்படும் பண்டங்கள் மற்றும் பணிகளின் மதிப்பு மட்டுமே மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அடங்கும்.
(ii) பெற்றோர்கள் அவர்களுடைய குழந்தைகளுக்கு செய்யும் பணிகள்/சேவைகள் மிக முக்கியமானது.
(iii) ஆனால் அதை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சேர்க்கப்படுவதில்லை. ஏனெனில் அது சந்தையில் விற்பனை செய்யப்படவில்லை.
(iv) இது போலவே சுத்தமான காற்று ஆரோக்கியமான வாழ்க்கைக்கு முக்கியமானது. இதற்கு சந்தை மதிப்பு இல்லை.
(v) ஆகவே இவை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வரம்புக்கு வருவதில்லை.

**GDP அளவை மட்டும் அளவிடுகிறது தரத்தை அல்ல :**

(i) 1970 களில் பள்ளிகள் மற்றும் வங்கிகளில் பந்துமுனை பேனாக்கள் பயன்படுத்த அனுமதிக்கவிலை.
(ii) ஏனென்றால் இந்தியாவில் கிடைக்கக்கூடிய மிக தரமற்ற பொருளாக இருந்தது.
(iii) அதன் பின்னர் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட பந்துமுனை பேனாக்களின் தரம் மேம்படுத்தப்பட்டதால் அவற்றின் உற்பத்தியும் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்தது.
(iv) எனவே பண்டத்தினுடைய தரம் என்பது மிக முக்கியமானதாகும். ஆனால் அது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பின்பற்றப்படுவதில்லை.

**GDP யில் நாட்டு வருமான பகிர்ந்தளிப்பு பற்றி கூறவில்லை :**

(i) ஒரு நாட்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி விரைவாக வளரலாம். ஆனால் வருமானம் சமனற்ற நிலையில் பகிர்ந்தளிக்கப்படுகிறது.
(ii) இதனால் ஒரு சிறிய சதவீத மக்களே பயன் அடைகிறார்கள்.

**GDP மக்கள் வாழும் வாழ்க்கை முறையைப் பற்றி கூறவில்லை:**

மிகவும் குறைந்த சுகாதார நிலை மக்கள் ஜனநாயக மற்ற அரசியல் அமைப்பு அதிகமாக மற்றும் உயர் தற்கொலை விகிதம் ஆகியவை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உயர்மட்ட தனிநபர் வருமானத்தின் கைகளில்கொண்டு செல்ல முடியும்.

34) பன்னாட்டு நிறுவனங்களின் (MNC) நன்மைகள் மற்றும் தீமைகளை சுருக்கமாக எழுதுக.

**Answer : MNC யின் பரிணாம வளர்ச்சி:**

1. கிழக்கு இந்திய நிறுவனம், ஒரு வர்த்தக நிறுவனமாக இந்தியாவுக்கு வந்தது. அதன் பிறகு அரசியல் ரீதியாக நாடெங்கிலும் பரவலாக ஆதிக்கம் செலுத்தியது.
2. 1920களில் பன்னாட்டு நிறுவனங்கள் முதலில் பிரித்தெடுக்கப்பட்ட தொழில்களில் அல்லது தொழில் நடத்தும் நாடுகளின் மூலப்பொருட்களைக் கட்டுப்படுத்தி மெதுவாக இந்தியாவினுள் நுழைந்தன.
3. 1950களுக்கு பிறகு உற்பத்தி மற்றும் பணிகள் துறையிலும் ஈடுபட்டது. தற்போது, இந்தியாவில் நான்கு பெரிய ஏற்றுமதி நாடுகளான அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி போன்ற நாடுகளுக்கு சொந்தமான பன்னாட்டு நிறுவனங்கள் பெரும்பான்மையாக உள்ளன. இவற்றில்அதிகமானது அமெரிக்காவினுடையது ஆகும்.
4. இந்தியாவிலுள்ள 15 பெரிய பன்னாட்டு நிறுவனங்களில், 11 அமெரிக்காவை சேர்ந்ததாகும்.

**MNCயின் நன்மைகள்:**

1. பன்னாட்டு நிறுவனங்கள் குறைந்த விலையில் பொருட்களை தரமாகவும் மற்றும் பரிவர்த்தனை செலவு இல்லாமலும் உற்பத்தி செய்கிறது.
2. பன்னாட்டு நிறுவனங்கள் விலைகளை குறைப்பதால் உலகளாவிய நுகர்வோரின் வாங்கும் சக்தி அதிகரிக்கிறது.
3. பன்னாட்டு நிறுவனங்கள் வரி மாறுபாட்டை பயன்படுத்திக் கொள்ள முடியும்.
4. பன்னாட்டு நிறுவனங்கள் உள்ளூர் பொருளாதாரத்தில் வேலை வாய்ப்பினை ஊக்குவிக்கிறன்றன.

**MNCயின் தீமைகள்:**

1. பன்னாட்டு நிறுவனங்கள் முற்றுரிமையை (சில தயாரிப்புகளுக்கு) வளர்ப்பதற்கான ஒரு வழியாகும்.
2. பன்னாட்டு நிறுவனங்களினால் சுற்றுச்சூழலில் தீங்கினை உருவாக்க வாய்ப்புள்ளது.
3. ஒரு புரவலன் நாட்டின் பொருளாதாரத்தில், பன்னாட்டு நிறுவனத்தின் அறிமுகம் சிறிய உள்ளூர் வணிக வீழ்ச்சிக்கு வழிவகுக்கும்.
4. பன்னாட்டு நிறுவனங்கள் ஒழுக்க நெறிமுறைகளை மீறுவதோடு, தார்மீக சட்டங்களை அவர்கள் குற்றம் சாட்டி, மூலதனத்துடன் தங்கள் வணிக செயல்பாட்டினை திருப்பிக் கொள்வதற்கும் முனைவர்.

## PART - D

2 x 8 = 16

**Answer The All Questions :**

35) தென்கிழக்கு ஆசியாவை ஜப்பான் ஆக்கிரமித்தல்
அ) ஜப்பானிடம் வீழ்ந்த தென்கிழக்கு ஆகிய நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக
ஆ) பசிபிக் பகுதியில் நேசநாடுகள் சந்தித்த பின்னடைவுக்கான காரணங்களைக் கணக்கிடுக.
இ) மிட்வே போரின் முக்கியத்துவம் யாது?
ஈ) பர்மாவில் வாழ்ந்து கொண்டிருந்த இந்தியர்களுக்கு என்ன நேர்ந்தது?

**Answer :** அ) குவாம், பிலிப்பைன்ஸ், ஹாங்காங், சிங்கப்பூர், மலேயா, டச்சுகிழக்கிந்தியா, (இந்தோனிசியா), பர்மா ஆகிய அனைத்தும் ஜப்பான் வீழ்ந்தன
ஆ) போதுமான அளவிற்கு தயாரிப்பின்மையின் காரணமாக நேசநாடுகள், பசிபிக் பகுதியில் பின்னடைவுகளைச் சந்திக்க நேர்ந்தது. காலனிய ஆட்சியாளர்கள் குறிப்பாக ஆங்கிலேயர் தாங்கள் ஆண்டு வந்த பகுதியிலிருந்து வெளியேறினார். இதனால் ஜப்பானியரின் அட்டூழியங்களை உள்ளூர் மக்களே எதிர்கொள்ள நேர்ந்தது
இ) மிட்வே போரில் அமெரிக்க கடற்படை ஜப்பானின் கப்பற்படையைத் தோற்கடித்தது. இந்நிகழ்வு போரின் போக்கை நேசநாடுகளுக்கு சாதகமாக மாற்றியது
ஈ) பல இந்தியர்கள் பர்மாவிலிருந்து கால்நடையாகவே இந்திய எல்லையை வந்தடைந்த. இடையில் பெரும் துன்பங்களை எதிர்கொண்டனர். நோயின் காரணமாகவும் களைப்பினாலும் பலர் இறந்துவிட்டனர். அந்நாடுகளிடையே தங்கியவர்கள் ஜப்பானியரிடம் துயருற்றனர்.

36) பெர்லின் அவர் வீழ்ச்சியும் பனிப்போர் கால முடிவும்
அ) மேற்கு பெர்லின் பொருளாதாரம் எவ்வாறு செழித்தோங்கியது?
ஆ) கிழக்கு பெர்லின் மக்கள் ஏன் மேற்கு பெர்லினுக்கு நகர்ந்து செல்ல முயன்றார்?
இ) 1961 ல் கிழக்கு ஜெர்மனி ஏன் சுவரை எழுப்பியது?
ஈ) பெர்லின் சுவரின் முக்கியத்துவம் யாது?

**Answer :** அ) மார்ஷல் திட்டத்தின் துணையால் மேற்கு பெர்லின் பொருளாதாரம் மேற்கு பெர்லின் பொருளாதாரம் செழித்தோங்கியது
ஆ) (i) கிழக்கு பெர்லினின் பொருளாதார வளர்ச்சியில் ரஷ்யா போதிய அக்கறை கொண்டிருக்கவில்லை
(ii) மேலும் கிழக்கு பெர்லினில் மக்களாட்சியோ சுதந்திரமோ இல்லாததால் மக்களுக்குப் பெரும்சிரமம் ஆக இருந்தது
இ) மேற்கு பெர்லின் ரஷ்யா கிழக்கு ஜெர்மனி மீது எந்த நேரத்திலும் படையெடுப்பார்கள் என்ற அச்சம் காரணமாக கிழக்கு ஜெர்மனி 1961ல் சுவரை எழுப்பியது
ஈ) பெர்லின் சுவர் முதலாளித்துவத்திற்கும் பொதுவுடைமைக்கும் இடையே இருந்தப் பிளவை அடையாளப்படுத்தியது